வீராணம் ஏரியினுடைய கொள்ளளவு 930 மில்லியன் கன அடி. நாம் போட்டு இருக்கிற திட்டத்தின் மூலம் 1,485 மில்லியன் கன அடிக்கு தண்ணீரைக் கொள்கின்ற அளவுக்கு அந்த ஏரியினுடைய தரத்தை உயர்த்த இருக்கின்றோம். ஆகவே, விவசாயத்திற்கு தண்ணீர்ப் பற்றாக்குறை வருவதற்கு வாய்ப்பு இல்லை. குடிநீர் கொடுத்தாலும்கூட அங்கு இருக்கின்ற அனைத்து விளை நிலங்களும் விளைகின்ற அளவுக்கு தண்ணீர் கொள்ளளவை அதிகப்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்து இருக்கின்றோம். ஆகவே, சென்னைக்குக் குடிநீர் விடுவதற்கும் வாய்ப்பு இருக்கிறது. அங்கே இருக்கின்ற விவசாய விளை நிலங்களுக்கும் தண்ணீர்ப் பற்றாக்குறை இல்லாமல் பாசனம் செய்வதற்கும் வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, எந்தவிதப் பிரச்சினையும் ஏற்படாது. இந்தத் திட்டம் விரைவிலே எடுத்துக்கொள்ளப்படும். அதற்கான நடைமுறைத் திட்டங்களும் இன்றைக்கு செயல்படுத்தப்பட்டு வருகின்றன: ஒப்பந்தங்களும் கோரப்பட்டு இருக்கின்றன; விரைவிலே முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 48, திரு. டி. வேலையா, மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

48—

துப்புரவுத் தொழிலாளர்களுக்கு அடுக்குமாடி வீடுகள்

*23774—*திரு. டி. வேலையா:*

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், திருநெல்வேலி டவுன் தெற்கு மவுண்ட் ரோடு பகுதியில் குடியிருந்து வரும் தாழ்த்தப்பட்ட அருந்ததிய இன துப்புரவுத் தொழிலாளர்களுக்கு குடியிருக்க அடுக்குமாடி வீடுகள் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருநெல்வேலி தெற்கு மவுண்ட்ரோடு பகுதியில் உள்ள துப்புரவுத் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டும் திட்டம் மேற்கொள்ள உரிய நிலம் கையகப்படுத்தப்பட்டு, பின்னர் துவக்கப்படும்.

1996 பிப்ரவரி 17]

திரு. டி. வேலையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துப்புரவுத் தொழிலாளர்கள் மிகவும் அதிகமாக வாழும் பகுதி திருநெல்வேலி நகரம். அங்கே வாழ்கிற துப்புரவுத் தொழிலாளர்கள் பொருளாதார ரீதியிலும், சமூக ரீதியிலும் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளார்கள். அவர்கள் வாழ்கின்ற பகுதியும் மிகவும் சுகாதாரமற்றச் சூழ்நிலையில் நகரத்தின் சுகாதாரத்திற்கும் கேடு விளைவிக்கும் நிலையிலே உள்ளது. இந்தத் திட்டம் 2 ஆண்டுகளுக்கு முன்பே ஆரம்பிக்கப்பட்டதாகவும், ஒரு சிறு நிர்வாக பிரச்சினை காரணமாக அதாவது ரெவின்யூ துறையிலிருந்து ஒரு கிளியரன்ஸ் கொடுக்கவேண்டிய காரணத்தினால்தான் தடைபட்டிருப்பதாக அறிய வருகிறேன். ஆகவே, இந்தத் திட்டம் எவ்வளவு விரைவில் முடிக்கப்படும் என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி நகராட்சியிலே பணிபுரிகின்ற துப்புரவுத் தொழிலாளர்களுக்கு தெற்கு மவுண்ட்ரோடு பகுதியில் வீடுகள் கட்ட தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்திடம் திட்டம் உள்ளது. இப்பணிக்காக நிலத்தினைக் கையகப்படுத்திய பின்னர், இந்தத் திட்டம் துவங்கப்படும். இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த தேவையான நிலம், திருநெல்வேலி மாநகராட்சியிடமிருந்து கையகப்படுத்தவும், ஹட்கோ நிறுவனத்திலிருந்து கடன் வசதி பெற்றுச் செயல்படுத்தவும் தேவையான சாத்தியக்கூறுகள் பற்றி தீவிர பரிசீலனைக்குப்பின் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் தக்க நடவடிக்கை மேற்கொள்ளும். எனவே, நிலம் கையகப்படுத்துகிற பணிகள் நடந்து கொண்டிருக்கிற காரணத்தால், நிலம் கையகப்படுத்திய பின்னர் பணிகள் துவக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. டி. வேலையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலத்தைக் கையகப்படுத்துவதில் மிகப் பெரிய பிரச்சினைகள் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இரண்டு, மூன்று ஆண்டுகளாக இந்த ஒரே காரணத்தைச் சொல்லி இந்த திட்டம் நீண்ட நாள் நிலுவையில் வைக்கப்பட்டிருக்கிறது. அது எந்த இடத்தில் நிலுவையில் இருக்கிறது என்பதையும், இதற்கு எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதையும், இந்தத் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன என்பதையும் அமைச்சர் அவர்களை விளக்குமாறு தங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி நகரத்திற்குப் பக்கத்தில் தற்போது பாளையங் கோட்டைப் பகுதியிலே துப்புரவுத் தொழிலாளர்களுக்காக 366

குடியிருப்புகள் ரூ. 238 இலட்சம் செலவில் அமைக்கும் பணி நிறைவேறி வந்துகொண்டிருக்கிறது. அங்கே இருக்கும் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு உரிய வீடுகள் கட்டுவதற்கு பாளையங்கோட்டைப் பகுதியிலே இடம் தேர்வு செய்யப்பட்டு திருநெல்வேலி தெற்கு மவுண்ட்ரோடு பகுதியிலே பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. மாநகராட்சியிடமிருந்து இடம் கேட்கப்பட்டிருக்கிறது. அதுவும் மிக விரைவிலே முடிக்கப்பட்டு நடவடிக்கைகள் விரைவிலே எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 49, திரு. கே. ஏ. மனோகரன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

49—

சிட்கோ தொழிற்பேட்டை ஏற்படுத்தல்

*57171—திரு. கே.ஏ. மனோகரன்:

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேங்கனிக்கோட்டை அல்லது தளி பகுதியில் சிட்கோ மூலம் தொழிற்பேட்டை ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. துரை ராமசாமி, ஊரகத் தொழில்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்சமயம் அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

திரு. கே.ஏ. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் தேன்கனிக்கோட்டை பகுதி பிற்பட்ட பகுதியாக அறிவித்திருக்கிற காரணத்தினாலும், ஓசூர் நகரப் பகுதியில் பல்வேறு பன்னாட்டு நிறுவனங்கள் தொழில்கள் துவங்கயிருக்கிற காரணத்தாலும், அரசு தற்சமயம் இந்த சிட்கோ மூலம் தளி அல்லது தேன்கனிக்கோட்டை பகுதியில் தொழிற்பேட்டை அமைக்க மீண்டும் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம், தளி அல்லது தேன்கனிக்கோட்டை பகுதியில் 20 தொழில் முனைவோர்கள் தகுந்த தொழில் திட்டங்களுடன் தொழில்கூடம் வேண்டி, 25 விழுக்காடு முன்பணம் கட்ட முன்வருவார்களே யானால் அரசு கனிவோடு அதைப் பரிசீலிக்கும்.